DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 21/2023

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ரஞ்சித்குமார் |
| Father / Husband Name | ரமேஷ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.11.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மயிலாடுதுரை மாவட்டம் கருவேந்தநாகபுரத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன முருகன் மற்றும் காயம்பட்ட பாலமுருகனை தெரியும். 29.08.2022 ம் தேதி மதியம் 11.00–12.00 மணியளவில் முருகனும், பாலமுருகனும் இருசக்கர வாகனத்தில் காஞ்சிபுரத்திற்கு கோவில் வேலைக்கு செல்லும்போது மதுராந்தகம் அருகே பின்னால் வந்த SETC அரசு பேருந்து அவர்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு வழக்கில் காயம்பட்ட பாலமுருகன் தகவல் சொன்னார். பின்னர் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது முருகனுக்கு தலையில் அடிபட்டு சம்பவயிடத்திலேயே இறந்திருந்தார். பாலமுருகனுக்கு கையில் லேசாக அடிபட்டிருந்தது. பின்னர் இறந்துபோன முருகனின் பிரேதத்தின் மீது போலிசார் விசாரணை செய்தார்கள், நான் சாட்சியாக இருந்தேன்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்காததால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். விபத்தில் அடிபட்ட என் மாமா சென்ற இருசக்கர வாகனத்தில் மூன்று பேர் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தை நான் பார்த்தேனா என்றால் விபத்து நடந்த பிறகு சென்று பார்த்தேன். நான் வெளியூர் என்பதால் விபத்து நடந்த இடத்தின் ஊர் பெயர் எனக்கு தெரியவில்லை. எனக்கு விபத்து பற்றி பாலமுருகன் என்பவர் இரவு சுமார் 8.00 மணியளவில் தகவல் சொன்னார். போலிசார் என்னை மறுநாள் 30ம் தேதி காலை சுமார் 10.00–11.00 மணியளவில் அரசு மருத்துவனையில் வைத்து விசாரித்தார்கள். என் மாமாவின் பிரேதத்தை எப்போது பெற்றோம் என்றால் அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் பெற்றோம். அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.